மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 112/2022

பெயர் : ஜெயஸ்ரீ
சாட்சி – வா.சா–1 நாள்: 16.03.2026

---

**குறுக்கு விசாரணை (3ம் பிரதிவாதி தரப்பு)**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் இறந்து போன பழனியப்பனின் வாரிசு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் தற்போது அமெரிக்காவில் பணிபுரிகிறார். எனது மகன் இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்காக எனக்கு ஒரு அதிகார பத்திரம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் அமெரிக்காவில் இருந்து தான் நோட்டரி முன்பு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவர் எனக்கு அளித்துள்ள அதிகார பத்திரம் இங்கு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யயப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. எனது மகன் எனக்கு அளித்துள்ள அதிகார பத்திரம் இங்கு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யயப்படாததால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும், எனவே அந்த அதிகார ஆவணத்தின் அடிப்படையில் எனது மகன் சார்பாகவும் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2. எனக்கும் எனது கணவருக்கும் நடைபெற்றுள்ளது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. திருமணம் புகைப்படங்கள் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எனக்கும் டாக்டர் பழனியப்பனுக்கும் சட்டப்பூர்வமாக விவாகரத்து ஆகிவிட்டதா என்றால் இல்லை. நான் எனது கணவருக்கு எதிராக தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கினை சமாதானமாக முடித்து கொண்டோம் என்றால் சரிதான்.

3. லில்லி பிலோமினா என்பவர் தான் பழனியப்பனின் சட்டப்பூர்வ மனைவி என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பல்லடம் வட்டாட்சியர் கடந்த 05.02.2025 தேதியில் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி ஆகியோர்கள் தான் காலம்சென்ற பழனியப்பனின் வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. நான் இந்த வழக்கினை வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி ஆகியோர்கள் மட்டுமே காலம்சென்ற பழனியப்பனின் வாரிசுகள் என்று விளம்புகை செய்வதற்காக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை 2ம் பிரதிவாதி ஏற்கனவே மேற்படி மூவரையும் பழனியப்பனின் வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளதால் இந்த வழக்கே பயனற்றதாகிவிட்டது என்றும், இந்த வழக்கு அனுமதிக்க உகந்ததல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.16 18:14:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.